Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஇல (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருது ஞூ ஆடி மீ கoஉ வெள்ளிக்கிழமை (26 July. 1963) [இல-கஎ

## நாயன்மாரும் சிரமதானமும்

[அண்மையில் முரசுமோட்டை பாரதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற "சிரமதான கருத்தரங்கில்" திரு மு. சிவலிங்கம் தலைமைவகிக்க, திரு. சி. க. வேலாயுதபிள்ளை "உருத்திரபுரம் காந்தீயசேவாசங்கத்தலைவர்" ஆற்றிய உரைச்சுருக்கம்.]

"நமது நாட்டில் முற்காலத்தில் சிரமதானத்தின் மூலம் குளங்களைக் கட்டினார்கள், பாதைகளை அமைத்தார்கள், ஆலயங்களை நிர்மாணித்தார்கள். மக்கள் தமது பொதுத் தேவைக்காக - சமுதாயத்துக்காக இவ்விதம் தங்கள் உடல் உழைப்பைக் கூட்டாக தியாகம் செய்தார்கள் இத் தியாகத்தின் மூலம் தோன்றிய பெரிய குளங்களும் பாதைகளும் ஆலயங்களும் இன்றும் நம் கண்முன் காட்சி அளிக்கின்றன. இத் தியாக சிந்தனை வரவர அருகி இன்று மக்கள் தமது சொந்த வேலைகளைக்கூடச் செய்ய ஆற்றல் அற்றவர்களாகி விட்டனர். எதற்கெடுத்தாலும் கூலிகளைத் தேடுகின்றனர். கூலியாட்களோ வேலை செய்வதைக் குறைத்து ஓய்வு எடுத்துக்கொள்வதே உள்நோக்கமாக வைத்துக்கொள்ளுகின்றார்கள். இதனால் பல வழிகளாலும் உழைப்பின் தத்துவம் சின்னாபின்னப்படுத்தப்பட்டு வெறும் பொய்மமையாகிவிட்டது.

'சர்வோதயம்' என்பது அனைவரின் தேவைகளையும் நிறைவேற்றுவது. இதை மகாத்மா காந்தியடிகளுக்குப் பின் விநோபா அடிகள் புதிய சாதனைகள்மூலம் நிறைவேற்றிவருகிறார்கள். இவ்வடிகள் பல்லாயிரக் கணக்கான மைல்களைக் கால் நடையாகவே நடந்து சர்வோதய செய்திகளைப் பரப்பி வருகின்றார்கள். பூமிதானம், சம்பத்து தானம், சிரமதானம், அறிவுததானம், சாதனதானம், என பலவழிகளில் பரப்பி வருகின்றார்கள். பாரதத்தில் இந்த இயக்கம் மிகவும் வளம்பெற்று நடைபெற்று வருகின்றது.

சிரமதானத்தின் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் பொருளாதாரக் குறைபாடுகளையும் சீர்படுத்தமுடியும். இந்தியாவில் பல பாகங்களிலும் காந்திசேனையைச்சேர்ந்த சிரமதானிகள் ஆங்காங்கு பல அபிவிருத்தவேலைகளில் ஈடுபட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக வேலைசெய்து வருகின்றார்கள். பொல்லாத சுயநல சிந்தனையில் இருந்து மனிதன் விடுபட்டுப் பொதுநலத்துக்காகத் தனது நேரத்தையும் உடல் உழைப்பையும் தியாகம் செய்யும் உணர்ச்சிகளை வளர்க்கும் மனமாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றார்கள் இதையே சர்வோதயப் புரட்சி என அழைக்கப்படுகின்றது.

சிரமதான வேலைகளில் மக்கள் பலர் கூட்டாகச் சேர்ந்து ஈடுபடுவதன்மூலம் சமூக கூட்டுறவு ஏற்படுகின்றது. ஒருவரை மற்றவர் அறியவும் துணை செய்யவும் சந்தர்ப்பம் உண்டாகின்றது. இதனால் வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமை ஏற்படுகின்றது. இதே நேரத்தில் சமூக தேவைகளும் நிறைவேறுகின்றன, பொருளாதார சிதைவு குறைகின்றது. பரந்த மனப்பண்பு வளர சரீர உழைப்பு உதவுகின்றது.

இந்த மறுமலர்ச்சி இயக்கம் இலங்கையிலும் தோன்றியிருக்கின்றது. இதைத் தென் இலங்கையில் உள்ள திரு. ஏ. டி. ஆரியரத்தின அவர்கள் சர்வோதய - சிரமதான இயக்கம் என ஆரம்பித்தார்கள். ஆசாரிய விநோபா அடிகள ஆசீர்வதித்தார்கள். இயக்கம் பரந்துபட்டு வளர்கின்றது. வட இலங்கையில் உருத்திரபுரம் என்ற கிராமத்தில் சென்ற ஏப்ரல் மாதம் சிரமதான இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது, மக்கள் மத்தியில் அறிமுகஞ் செய்து

தொடர்ச்சி 2ம் பக்கம்

## விடுமுறைகாலச் சைவ சமயப் பயிற்சி வகுப்பு 1963

சைவாசிரியர் சங்கத்தின் தீர்மானப்படி வித்தியா பகுதியாரின் அனுசரணையுடன், விடுமுறைகாலச் சைவசமயப் பயிற்சி வகுப்பு வண்ணார்பண்ணை நாவலர் சைவபபிரகாச வித்தியாசாலையில் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாத விடுமுறை காலத்தில் மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறும். திகதியும், பாடவிதானங்களும் பங்குபற்றும் ஆசிரியர்களுக்குப் பின்னர் அனுப்பிவைக்கப்படும்.

பாடசாலை அதிபர்கள், தலைமை ஆசிரியர்கள் தத்தம் பாடசாலைகளிலிருந்து சமயம் படிப்பித்தற்குப் பொறுப்பாயுள்ள ஆசிரியர்களில் ஒருவர் பெயரைச் சிபார்சு செய்து 3-8-63 க்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## நற் சிந்தனை

எல்லா உயிரினும்
நில்லாமல் நிற்பவனை
நினைந்து நினைந்துருகி
நிற்பதுவு மெக்காலம்.

## கொடியேற்ற வைபவம்

இன்றையதினம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் கொடியேற்ற வைபவம் நடைபெற இருக்கிறது.

எல்லா வுலகமு மானுய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதீ.

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

## பாம்பு கடி வைத்தியருக்குப் பல வசதிகள்

கொட்டடியைச் சேர்ந்த பிரபல பாம்புக்கடி வைத்தியர் திரு. க. சிற்றம்பலத்திற்கு இலவசமாக நோயாளர் விடுதியொன்று கட்டிக் கொடுப்பதெனவும், ஓர் மோட்டார் வண்டி வாங்கிக்கொடுப்பதெனவும், இலங்கை அரசாங்கம் கொழும்பிலுள்ள பாம்புக்கடி வைத்தியரான திரு. மொறைசுக்கு ஆண்டுதோறும் 6000 நன்கொடை வழங்குவது போன்று திரு. க. சிற்றம்பலத்திற்கும் வழங்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கோர வேண்டும் என்றும், இவர் தமது விஷகடி வைத்தியம் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்வதற்காக, கொழும்புத்திட்டத்தின்கீழ் இந்தியா போன்ற நாடுகளுக்குச் செல்ல விசேஷ சலுகை பெற்று (ஸ்கொலசிப்பில்) செல்லவேண்டிய ஒழுங்குகளை ஆயுள்வேத வைத்திய சபையும், சுகாதார அமைச்சும் செய்யவேண்டுமென்று கோருவதாகவும், யாழ்ப்பாணம் மாநகரசபை ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

## இனிய நினைவும் இனிய பொருளும்

### நாயன்மார்கட்டு இராஜ இராசேஸ்வரி அம்பாள் கோயில் விரிவுரைக் கூட்டம்

மேற்படி கோயில் ஆறும் திருவிழாவன்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைச் சமயப் பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் தலைமையில் ஆசிரியர் க. முருகேசு அவர்கள் "காரைக்காலம்மையார்" என்னும் பொருள் பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர்கள்.

'மனிதன் ஒவ்வொருவனும் தன்னைத்தானே இனியனுக்கருதி வாழ்க்கை நடத்தும் இயல்பு உடையவன். அதனால் நான் எனது என்னும் செருக்குண்டாகும். தன்னிலும் பார்க்க இனிய பொருளுண்டென்றும், நினைவு உண்டென்றும் கருதத்தொடங்கிய பின் மனிதன் அருள் வாழ்வை ஆரம்பிக்கின்றான் அந்தப்பொருளை வழங்குவதற்கே ஆலயங்கள் அமைந்தன, ஆலயங்களை அருள் நிலையங்களாக்கக்கூடிய கிரியைகளை வேதாகமங்கள் விதித்திருக்கின்றன. அங்ஙனமே ஆலயங்கள் நடத்தப்பட வேண்டும்' எனத் தலைவர் கூறினார்.

பின்பு விரிவுரையாளர் "காரைக்காலம்மை" யாருடைய பிறப்பு, கடவுள் பக்தி, சிவனடியாருக்கு அமுதூட்டல், கணவன் அம்மையாரைத் தெய்வமெனக்கருதி அவரைப் பிரிதல், என்பு யாக்கையைப் பெறுதல், கைலாய யாத்திரை, திருவாலங்காட்டையடைதல் ஆகியவற்றையெல்லாம் விரிவாக எடுத்து விளக்கினார்கள்.

யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் நடந்த மேற்படி சமயப்பிரசாரத்தில் ஆண்களும் பெண்களுமாக ஏராளம்பேர் சமுகம் கொடுத்திருந்தனர்.

## எழில் நதி பொழில் கதிர்காமம்

"அளவையூர் - சஞ்சீவி"

வெண்பா

சித்தங் குளிரவைக்கும் தெய்வம் - தெளியவைக்கும்
அத்தமிகு வாழ்வுக் கருள்சுரக்கும் — நித்தியமும்
உன்னுமடி யார்கூட்டம் ஓம்முருகா நாதமிக
மன்னுங் கதிர மலை.

இராகம் : கமாஸ் :: தாளம் : ஆதி

பல்லவி

ஆறுதல் கொண்டிடலாம் - மனமே
ஆறுமுகனைவடி வேலனைக் கண்டிடலாம் (ஆ)

அநுபல்லவி

ஏறும்கதிரமலை இறங்கிடும் மாணிக்க
எழில்நதி பொழில்கதிர் காமத்தைச் சேவிக்க (ஆ)

சரணம்

மனைவி மகவுவழி வருந்துயர் ஓய்ந்திடும்
வறுமை பொல்லாதபிணி வல்வினை தேய்ந்திடும்
நினைவுகள் [illegible] நெஞ்சகம் பாய்ந்திடும்
[illegible] நீள்கலை தோய்ந்திடும். (ஆ)

## ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தின் 1962-1963-ம் ஆண்டு வருடாந்த விழாவும் பரிசளிப்பும் ஆடி மாதம், 11-ம்திகதி (27-7-63) சனிக்கிழமை, மானிப்பாய் இந்துக்கல்லூரி வாகீசர் மண்டபத்தில் நடைபெறும்.

### தாதிமார்களுக்குப் பிரியாவிடை

25ம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் திரு. T. S. துரைராசா அவர்களின் தலைமையில் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றி நம் நாடு விட்டுச் செல்லவிருக்கும் கன்னியாஸ்திரி தாதிமார்களின் சேவை நலத்தைப் பாராட்டுமுகமாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ஆடி மீ
௰ உ வெள்ளிக்கிழமை

## ஒற்றுமைக்கு ஒரே ஒருவழி

சீர்குலைந்து முன்னேற்றமின்றி எங்கள் நாடு அல்லலுறுவதைப் பார்த்துக் கொண்டிருப்பது பெரும் பாதகமாகும். தேசாபிமான உணர்ச்சிக்கே பங்கம் விளைவிக்கும் இந்த நிலைமையை மாற்றியமைப்பது பரோபகாரிகளின் பணியாகும். இதற்காகப் பல வேறு சங்கங்கள், அரசியற்கட்சிகள், தலைவர்கள், அறிஞர்கள் உழைத்த வண்ணமாக இருக்கின்றூர்கள் என்பது உண்மையேயெனினும் ஒருமுகப்படுத்தி ஒற்றுமையாக ஒரு வழியைக் காண்பதில் இவர்கள் சித்தியடையவில்லை எடுத்த காரியம் இனிது முடிவெய்த இறைவன் இன்னருள் வேண்டுமென்ற பண்புடைய தமிழக மக்கள், சமய சபைகள் மூலமாக முன்னேற்ற முறையை வகுப்பதில் நம்பிக்கையுடையவர்கள். சைவமும் தமிழும் இணைபிரியாதவை; இயைந்து இயங்குபவை. இந்த உண்மையை நன்குணர்ந்த சைவபரிபாலன சபையாரும், கொழும்பு விவேகானந்த சபையாரும தொடர்ந்து பல்லாண்டுகளாக ஆற்றிவந்த தொண்டின் அடிப்படையிலே இப்பொழுது ஆட்சியாளருக்கும் அரசியற் கட்சிகளுக்கும் அனைவருக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். இவ்விரு சபைகளும வகுத்திருக்கும திட்டமும அதற்காக எவ்வாறு பணியாறற வேண்டும என்ற ஆலோசனையும் பெரிதும பொருத்தமானவை. அவற்றை யாவரும் ஆராய்ந்தறிந்து தொண்டு செய்வது நன்று.

ஒன்றின் மேற்பட்ட மொழியும், மதமும், இனமும் நிலவுகின்ற நாட்டில் ஒற்றுமை அவ்வகையில் உண்டானல் அன்றி மக்கள் முன்னேற்றமடைய மாட்டார்கள். ஒற்றுமைக்கு வழி உண்மையைக் கடைப்பிடித்தலே. பிறப்புரிமையான தனது மொழியைத் தனது மதத்தைப் பேண வேண்டியவன் மனிதன் என்ற உண்மை உலக உண்மை. இதை அரசியற் கட்சிகள் மறுக்கவோ மறைக்கவோ முடியாது பேற்றேரைப் பேணும் பெற்றி மனிதப்பண்பாட்டின் சிகரமாயுள்ளது. அதை அற்றவிடத்திலேதான மனிதத்தன்மை குன்றிச் சீர்கேடு தோன்றும். தாய்மொழியென்றும மூதாதையர் மதமென்றும் தந்தையர் நாடென்றும சொல்லும் பொழுதெல்லாம் இந்த உண்மை விளங்குவதை அறியாதாரும் உண்டோ? ஆனல் அரசியற் கட்சிகளும ஆளும் தத்துவம்பெற்றவர்களும இதை அறிந்தும அறியாதார் போன்று நடப்பது நாட்டின் நன்மைக்குப் பங்கம் விளைவிப்பதாகும் எனவே சபையார் கொணர்ந்திருக்கும் மொழிக் கொள்கைத் திட்டத்தை ஆட்சியாளருககு நன்கு புலப்படுத்துவது தேசாபிமானிகளின் கடமையாகும். வெளியீடுகளும் பொதுநலப் பேச்சாளர்களும் இந்தப் பணியில் மேலதிகமாக உழைததல வேணடப்படுகின்றது ஒற்றுமைக்கு ஒரே ஒரு வழி மொழி உரிமையை மக்களுக்கு உரிய முறையில வழங்குவதே. தமிழ்பேசும் மககள இந்நாட்டிற்குரியவர்கள். எனவே அம்மொழி இந்நாட்டிற் குரியதாகும். அதிலும் செம்மை திகழும் அம்மொழிக்கு அந்த உரிமை எம்மையிலும் சொந்தமானதே.

## சிங்கப்பூர் இந்து சபை

### 7-வது பொதுக்கூட்டம்

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 28-7-63 சிங்கப்பூர் இந்து சபையின் 7-வது பொதுக்கூட்டம் நொறீஸ் வீதியிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சிறந்தமுறையில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச்சபை கடந்த ஆண்டுக்காலத்தில் . அளப்பரிய பொதுப் பணிகளை தமிழருக்கு ஆற்றியுள்ளது.

இச்சபையின் நிர்வாக சபையினர், சிங்கப்பூரில் வதியும் இந்துக்கள் தஙகள் சமய ஆசாரப்படி தமது கிரியைகள் யாவும் செய்வதற்கு ஏற்ற வசதிகளையும் வாய்ப்புக்களையும், அரசாங்கத்திடம் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

சிங்கப்பூரில் நாவலர் பெருமான் நினைவு விழாவைச் சிறப்புறக் கொண்டாடியமை, ஈழத்திலிருந்து அங்கு சென்ற சமயப பெரியார்களைக் கொண்டு சமயப் பிரசாரங்கள் செய்வித்தமை, அவர்களைக் கௌரவித்தமை தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் அங்குச் சென்ற பிரமுகர்களுக்கு மாலை சூட்டி வரவேற்றுபசரித்தமை முதலிய பணிகள் இச்சபை இவ்வாண்டில் சாதித்தவற்றில் ஒருசிலவாகும்.

## இரண்டு தினங்கள் சைவப்புலவர் மகாநாடு

யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாசாலையில் நாளையிலிருந்து இரண்டு தினங்களாகத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சைவப்புலவர் மகாநாட்டில், பண்டிதமணி சித்தாந்தசாகரம் திரு. சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் பொன். முத்துக்குமாரன், வியாகரண பண்டிதர் சீதாராமசாஸ்திரிகள், சைவப்புலவர் அருணசலதேசிகர், இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியர் நம. சிவப்பிரகாசம, சேர். கந்தையா வைத்தியநாதன். உதவி வித்தியாதிபதி S. U. சோமசேகரம் M A, பண்டிதர் வே சங்கரப்பிள்ளை, சு. நடேசபிள்ளை முதலியோர் உட்படப் பலர் பங்குபற்றுகின்றனர்.

இவ்விழாவில் பரீட்சைகளில் தேறினேருக்குப் பட்டமளிப்பு, பொன்னடை போர்த்தல போன்ற வைபவங்களும் இறுதி நாள் நடைபெறும்.

### நாயன்மாரும் ... ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டது. தென் இலங்கைச் சகோதரர்களும் வட இலங்கைச் சகோதரர்களும் ஒன்றுசேர்ந்து சிரமதானத்தின்மூலம் - சரீர உழைப்பினல் வீதி ஒன்றை அமைத்தார்கள் கிராமமக்கள் உணவளித்தார்கள்; அன்பாக உபசரித்தார்கள். இது வட இலங்கையில் ஏற்பட்ட ஒருபுரட்சியாகும்.

உருத்திரபுரம் சிரமதான முகாமில் தங்கியிருந்த காலத்தில் நடந்த கருத்தரங்குகள், வகுப்புக்கள் மூலம் சர்வோதய சிரமதான செய்திகள் மக்கள் உள்ளங்களில் செறிந்தன. இத்தகைய கருத்து மனமாற்றமூலம் மக்கள் உள்ளங்கள் விழிப்படைந்தன. கிராமவாசிகளின் உழைப்பு - ஜனசக்தி வீதிகளாகவும் அணைக்கட்டுகளாகவும் அமைந்துகொண்டிருக்கிறது. சுயசக்தியை, அருளாளர் நாவுக்கரசர் சமுதாயத்துக்காக, ஆண்டவனுககு அர்ப்பணித்து உழவாரத் திருத்தொண்டு செய்தார்கள் தெய்வத தமிழ் திருவாசகப் பனுவல தந்த மணிவாசகப்பெருமான் அமைச்சியலில் வைகை பெருக்கெடுத்தது. மக்கள் திரண்டெழுந்து சிரமதானப் பணியை மேற்கொண்டு வைகைக்கு அணை அமைத்தார்கள். இந்த வைகைக்கு அணை அமைப்பதற்கு ஒரு சிரமதானியாக நமது சொக்கநாதப்பெருமான் எழுந்தருளி [illegible]

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## ஸ்ரீ சு. சிவபாதசுந்தரர்பிள்ளை நினைவு நாள்

இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணியிலிருந்து யாழ். சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபத்தில்

பண்டிதர் பிரம்மஸ்ரீ வ மு. இரத்தினேசுவர ஐயர்
சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி

ஆகியோரால் ஸ்ரீசிவபாதசுந்தரப்பிள்ளை அவர்களைப்பற்றி சொற்பொழிவுகள் நடத்தப்படும்.

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச்செய்த

## உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

( முற்றொடர் - 23 )

முத்திதனில் மூன்று முதலு மொழியக்கேள்
சுத்தவநு போகத்தைத் துய்த்தலணு — மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்புடனே கண்டுகோளப் பா. (50)

கொ—கூ: அப்பா, முத்திதனில் மூன்று முதலும் (யாம்) மொழிய (நீ) கேள், சுத்த அநுபோகத்தைத் துய்த்தல் அணு; மெத்த (+ ஏ) இன்பம கொடுத்தல் இறை; இத்தை விளைவித்தல் மலம; (இவ்வுண்மைகள் இங்ஙனமாதலை) அன்புடன் (+ஏ) (நீ) கண்டுகொள்.

ப - ரை: அப்பா - மாணக்கனே, முததிதனில் - ஆன்மாவுக்கு முத்திநிலை வந்தெய்துங்காலத்தலே, மூன்று முதலும் மொழியக் கேள் - பதி பசு பாசம் ஆகிய மூன்று பொருள்களும் (அழிவின்றி) நித்தமாய் நிற்கும் தன்மையைச் சொல்லுகிறேம் கேட்பாயாக, சுத்த அநுபோகத்தைத துய்த்தல் அணு - தூய பரமுத்தி இன்பததை அநுபவித்திருப்பது ஆனமாவாம; மெதத இன்பம் கொடுத்தல் இறை - இடையீடின்றி (அநுபவிக்குந்தோறும் புதியதாய், தெவிட்டாததாய்) அப் பேரின்பததைக் கொடுத்து நிற்பது சிவமாய்; இத்தை விளைவித்தல் மலம் - இப் பேரின்பத்தை ஆன்மா நுகருமபடி அடைவித்து நிற்பது மலமாம; அன்புடனே கணடுகொள் - (இவ்வுணமைகள் இங்ஙனமாதலை) அயரா அன்பினலே அறிந்து அநுபவிப்பாயாக.

"பதியினைப்போல் பசு பாசம் நித்தம் என்றாய் சதியிடத்து மூன்றினையும காட்டு" என மாணவகன் வேண்டினுகை, இப்பாடலினல் அம்மூன்று முதலும் முத்திக் காலத்தும் உளவாதலை ஆசிரியர் கூறியருளுகின்றூர்.

முத்திக்காலததில் உளவாகிய மூன்று முதல்களுள் பதி பசு ஆகிய இரண்டினதும் அழிவற்ற தன்மைகளைக் கூறுமுகத்தால், பேரினபதலைதக் கொடுதது நிற்பது பதி எனவும் அப்பேரின்பத்தை அநுபவித்து நிற்பது பசு எனவும் காட்டிய ஆசிரியர். பாசமும் உளதாம என்பதை விளக்கும்போது "இத்தை விளைத்தல் மலம் என்கின்றூர்.

இன்பத்தைக் கொடுத்து நிற்பவனுகிய பதியும, அதனை அநுபவிதது நிற்பதாகிய பசுவும் அழிவின்றி உளவாம் எனபது வெளிப்படை. ஆனல் முத்தியடைதற்கு 'ஆணவம்' இல்லையாதல் வேண்டும் எனவும், 'மும்மலமும்' தீர்வாக வேண்டும எனவும கூறப்படும் இடங்கள் இநூலுட் பலவுள. "இருளானது தீர அருளானது சிவததே அணுவை ஆக்கும எனவும, "சித்தமலம் அற்றூர் முத்திதனில் செறிந்திடுவர்" எனவும், "அந்தன் விழ்க்குற்றமற ஆதித்தன் நின்றதுபோல் (ஆனமாவிடம பொருந்திய ஆணவக் குற்றமறப்) பதி பொருநது நிற்கும்" எனவும முன் வந்த செய்யுளகளால முததியில் ஆணவ மில்லையாதல் கூறப்பட்டது. அனறி "மகரம உதரம" என்றும், "அடிக்கீழ முயலகனர் தவதும் மகரம" என்றும், "ஊற்றமாஊன்று மலர்ப் பதத் த உற்ற திரோதம" என்றும, "மலம் சாய அமுக்கி" எனறும் "மும மலத்தை மோசித்து" என்றும் வரும பகுதிகள் மும்மல நாசத்தையுமே குறிப்பிட்டன. இங்ஙனம ஆணவம் மாததிரமன்று, மும்மலமுமே முத்தியடைந்த காலதது இல்லையாம எனக் கூறிய ஆசிரியர், மலமும உளவாய்ப் பேரின்பத்தையும் விளைவித்து நிற்கும் எனனும் கருத்தில் "இத்தை விளைவித்தல் மலம்" என உரைததமை பொருந்துமா? முன்னுக்குப் பின முரணுதா? என்ற ஐயப்பாடுகளை வருவிக்கும். அவை சிந்தித்து உணரத தக்கவை.

பதி பசு பாசம மூன்றும் நித்தம் என்பது சைவ சித்தாந்தம். அதுபற்றி, "முத்திதனில் மூன்று முதலும் மொழியக் கேள்" என்றவர், பாசமும் உளது என்றே கொண்டார். எனவே, "இததை விளைவித்தல் மலம்" என்றதில் 'மலம்' பாசத்தையே குறித்து நின்றது; அப் பாசம் ஆணவம் மாத்திரம அன்று; அது ஆணவம் கன்மம் மாயை என்னும மூன்றுமேயாம். ஆதலின், முத்திநிலையிலும் மும்மலமும் உளவாதல் வேணடும். இவற்றுள் ஆணவம உளவாதலை முதலில் ஆராய்வாம்.

—தொடரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை அரங்கம்

**பாட்டாளி பாட்டு**
(கவிதைத் தொகுப்பு)

கவியோகி சுத்தானந்த பாரதியார்
வெளியீடு :
ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி
விலை ரூபா 1-50

தமிழினத்துப் பாட்டாளி மக்களுக்குச் சமர்ப்பணமாக கப்பட்டிருக்கும் பாட்டாளி பாட்டில் நல்ல கவிதைகள் பல உண்டு. நல்ல வரம் தருப வண்ணம் அன்னை பராசத்தியை அஞ்சலிக்கும் பாடலில்

அலைசின வெறிகள் - அடங்கி
ஆணவப் பேயடக்கி
மலையென வுறுதி – கொண்ட
மனநலந்தருவாய்
பாட்டுப்பறவைகள் போல் -
பாயும் [ஓ]மெனப்
அருவியைப்போல்
தோட்டக் கனிமரம் போல் –
சுதந்திரத் தொண்டுசெய்
யின்பமருள்

என்ற செய்யுள்களும் பொது வணக்கத்தில்

வானாய், மலையாய் நதியாய்
வனமாய் மலராய்க் கனியாய்
தேனாய் அழகின் கலையாய்த்
திகழும் இன்பத் திருவே.
உடலும் உயிரும் மனமும்
உளமும் வளமுற் றிடவே
கடமை புரியும் கனலைக்
கருணைக் கடலே அருள்வாய்

என்று வேண்டுதலும் கருணையுள்ளம் என்ற கவிதையில்,

நேர்மையான நினைவும் செயலும்
நீண்டுயர்ந்து நிலாவும் புகழும்
கூர்மையான மதியும்கொடுப்பாய்
கோவிலாக உலகினைக் கொண்
டாய்

என்ற செய்யுள் முதலாக ஒவ்வொரு கவிதையிலும அரிய பல செய்யுள்கள் இழைந்து படிப்போர் மனங்களில் இன்பமும சாந்தியும் தந்து நிற்கின்றன.

இத்தொகுதியில் பாட்டாளி மக்களிடம் பரிவு காட்டுபவையாகவும அவர்களின் கள்ளமற்ற இதயங்களைக் கூறி உருகுபவையாகவும், அவர்கள் இன்னல்களைந்து இன்பமுறுதற்கும் இலட்சியத்துடன் அவர்களுக்கு அறிவுரை வழங்குவதுடன் அவர்களுக்காகப் பரம்பொருளிடம் அருள் வேண்டி நிற்பவையாகவும் பாடப்பட்டுள்ள இககவிதைகள் கவியோகியின் கவிதா சக்திககுத் திறமான எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

இத் தொகுதியில்,

ஈழ நாடெழுந்த சிங்கம்
இலக்கியப் புலவர் சிங்கம்
ஆழமாக் கடலைப்போலே
அறிவினை யுடைய சிங்கம்
சூழநந் தமிழும் சைவத்
துறைகளும் உலகமெல்லாம்
வாழவே வாழ்ந்த சிங்கம்
வளம்பெற வாழ்க மாதோ.

என்று தொடங்கி நாவலர் பெருமானை வாழ்த்திநிற்கும் நாவலர் வாழ்த்துப்பாவும் சிறந்து விளங்குகிறது.

யாவரும் படித்துப் பயனடைய வேண்டிய தொகுப்பு இது. ——

## ஸ்ரீ. முருகன் தொண்டர்படை

மேற்படி தொண்டர் படையின் 4-ம் வருடாந்த ஆரம்ப விழாவைச் சங்கப் போஷகராகிய உதவி வடமாகாண வித்தியாதிபதி திரு. S. U. சோமசேகரம அவர்களால் அதன் தலைவர் வழக்கறிஞர் திரு. சி

## பாராட்டு விழாவும் பொற்கிழியும்

பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் பாராட்டு விழாவும் பொற்கிழி அளித்தலும் எதிர்வரும் 31-7-63 புதன் கிழமை மாலை 6 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெறும்.

இவ்விழா வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சு. உ. சோமசேகரம் அவர்கள் தலைமையில் நிகழும்.

பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகள் ஆசியுரை வழங்குவார். பாடசாலை ஆசிரியர்களால் வாழ்த்துப்பா வாசித்து அளிக்கப்படும்,

பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை, சமயப்பிரசார அமைச்சர் மு. மயில்வாகனம், வித்துவான் பொன் முத்துக்குமாரன், வித்வான் க. கார்த்திகேயன் ஆதியோர் அவர் சேவைநலன்களைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றுவர் ஈழநாடு ஆசிரியர் திரு கே. பி ஹரன் அவர்களால் பாராட்டுவிழா மலர் வெளியிடப்படும்.

வைத்திய கலாநிதி எஸ் சுப்பிரமணியம் அவர்களால் பொற்கிழி வழங்கப்படும் ——

## செல்வச்சந்நிதி திருவிழா

எதிர்வரும் 19-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் செல்வச்சந்நிதித் திருவிழாக்களை முன்னிட்டு அங்கு கவனிக்கப்படவேண்டிய ஒழுங்குகளையும் யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகளையும் செய்தல்பற்றியும் ஆராய அண்மையில் யாழ்ப்பாணம் தலைமைக் காரியாதிகாரி திரு சபாரத்தினம் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ——

## அப்பர் ஊரில் நினைவு கோயில்

சிதம்பரம் ஆடி 4. சமயகுரவர்கள் நால்வருள் ஒருவரான ஸ்ரீ அப்பர்சுவாமிகள் சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்பு திருவவதாரம் செய்த ஸ்தலமான திருவாமூரில் அண்மையில் சுமார் 32000 ரூபாய் செலவில் நூதனமான நினைவு கோவில் கட்டப்பட்டு ஆனி மாதம் 30-ம் தேதி அன்று ஸ்ரீலஸ்ரீ. கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் மகா கும்பாபிஷேகம் சிறந்த முறையில் நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம அவர்கள் மகா கும்பாபிஷேகத்திறகு ரூபாய் 10001 நன்கொடை கொடுத்துள்ளார்கள்.

ஸ்ரீ அப்பர்நினைவு கோவிலில புகழனர், மாதினியார், திலகவதியார் பிரதிஷ்டையும் செய்யப்பட்டுள்ளது.

திரு. மா, பா. "தினமணி"நிருபர்.

விசுவலிங்கம் தலைமையில் இன்று 26-7-63 வெள்ளிக் கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் தெற்கு வீதியிலுள்ள செல்லப்பா சுவாமிகள் ஆச்சிரமத்தில் [illegible] பித்து வைக்கப்[illegible] ——

## அடைவு நகை ஏல விற்பனவு

கோக்குவில் மேற்கு தம்பிப்பிள்ளை பொன்னையாபிள்ளை அவர்களிடம் **3-3-62** தொடக்கம் **31-7-62** வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை **1963**-ம் ஸு ஆகஸ்ட் மாதம் **16**-ம் திகதி (**16-8-63** வெள்ளிக்கிழமை முற்பகல் **10** மணி தொடககம் மேற்படி அடைவு கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
ஏலவிற்பனவாளர்,
643, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
25-7-63.
M 72. 26, 2-8-63

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையில் டிக்கோட்டு 7163 ம் இலக்க வழக்கில் 1963ம் ஆ ஆனி மீ 3 ம் உ யைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1963ம் ஸு ஆவணி மீ 29ம் உ வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணிவரையில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

புலோலி மேற்கு முருகேசு கைம்பெண் தெய்வானைப்பிள்ளை
வழக்காளி.

எதிராக

புலோலி கிழக்கு
1. வேலுப்பிள்ளை சந்திரசேகரம்
2, பெண் நிததிய லக்ஷமி
எதிராளிகள்.

அறவிடவேண்டிய தொகையின் விபரம்

சித்தாரித்த தொகை ரூபா 5793. ரூபா 4000 க்கு 5-9-61 தொடக்கம் 29-5-62 வரைக்கும் 9 வீத வட்டி ரூபா 240, ரூபா 6033 க்கு 29-5-62 தொடக்கம் 3-6-63 வரைககும் 5 வீத வட்டி ரூபா 301-65 கோட்டுச் செலவு ரூபா 294-76. மொத்தம் ரூபா 6629-41.

ஆதனம்

புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன்குறிச்சியிறைஅடியாக்கை தோட்டம் நில பர 7 1/4 வீடு 1. கூடிய நில பர 8. குளி 10½. இது உலாந்தா மா. வேலுப்பிள்ளையால் 1937 ம் ஸு மார்கழி மீ 5 ம் உ 342 ம் இலககதகில விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நில பர 9, குளி 8, இதில் மேற்கரைவாசிககான 11ம் துண்டுக்கு நில பர 4. குளி13. கல்வீடு, அடுக்களை, கிணறு, கக்கூசும் எல்லை கிழககு வல்லியப்பா ஆழ்வாப்பிளளைக்கு மறுபேருக்குமுடைய ஆதனம். வடககு ஆழ்வாப்பிள்ளை கநதையாவுக்குடைய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு ரோட்டு. ஆவ்வெல்லைக்குட்பட்ட நிலம், கல்வீடு, அடுக்களை கிணறு ககக்கூசு சகலதும்.

S. C. Kanagasabai
கொம்மிசனர்
புலோலிகிழக்கு, 22-7-1963.
M 89 26-7-63

## நாயன்மாரும் ... ... ....

(-2ம் பக்கத் தொடர்ச்சி)

டென்பதை உலகறியச் செய்வதற்கு பாண்டிய மன்னனிடம் பிரம்படியும் பெற்றார்.

சிரமதான இயக்கம் மக்கள் மனதைத் தூய்மைப்படுத்தி ஒருமுகப்படுததும் இலட்சியம் உடையது. இன்று இந்த இயக்கம் இலங்கையின் பல பாகங்களிலும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வளர்ந்து வெற்றி அளித்து வருகின்றது. வருகிற ஆகஸ்ற்மாதம் 16-ம், 17-ம், 18-ம், 19-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. சமுதாயத்துக்காக தியாகம் செய்யும் இந்தப் பணிகளில் ஈடுபடுவோர் கருத்தரங்குகள், வகுப்புகள் முதலியவற்றிலும் பங்குபற்ற வாய்ப்பாகும். இதனுல் [illegible] வளர்ச்சி [illegible] வாய்ப்பாகும். ——

## சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை

நாள்: சோபகிருதுஸு ஆடிமீ ௧௨உ (28-7-63) ஞாயிற்றுக்கிழமை
இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

மு. ப. 10 மணி தொடக்கம் பி. ப. 1 மணி வரை சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை, நாவலர் மண்டபத்தில் நடேசர் பூசை, திருமுறைப் பூசை, புராணபடனம், பெரியபுராணம் - வெள்ளானைச் சருக்கம், மாகேசுர பூசை,

இரவு 7 மணி விரிவுரைக் கூட்டம் ஆரப்பப்:
தலைவர் : பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர்
பிரசங்கம் : 'சுந்தரமூர்த்தி நாயனர்'
ஆசிரியர் திரு. க. முருகேசு அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம் 22-7-63

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

இவ்வாரம் 22-7-63 — 3-8-63

# உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தம்பி தங்கைகள் மிக உதவுவர். எதிரிகளுக்குஇடையூறும், உமக்கு நிலபுலன்களால் இலாபமும், செலவு அதிகரிப்பும் உண்டாம் புதன் மாலை வியாழன் வெள்ளியை எச்சரிக்கையோடு கழிக்குக.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

பணமளவில் நல்ல வாரம். புதிய முயற்சிகள் வெற்றிபெறும், நிலபுலன்களால் இலாபம் நிச்சயம், மன நிம்மதி இருக்காது, வியாழன் வெள்ளி சனி எச்சரிக்கையோடு கழிய வேண்டும்

மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

இடரிலிருந்து நண்பர்கள் மீட்பர். வழமையிலும் வேலை அதிகமாகும். ஆனுல் திடமான இலாபம் அடைய நிற்பீர், குடும்ப நிலைமை திருப்தியாயிராது.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

பணமளவில் நல்ல வாரம்- எதிரிகளுக்கு இடையூறும் புது முயற்சிகளில் வெற்றியும் உண்டாம். குடும்பத்தகராறுகளும் இனத்தவருடன் மோதலும் ஏற்படும், உடல்நிலை கவனம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

சண்டைகளைக் கட்டிக்கொள்வதில் முந்தி நிற்பீர். வயிற்றுக் கோளாறும், மனக்கவலையும், போட்டியிடுவோரை வெல்வதும் உண்டாம்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உடல் நிலைக் கோளாறுக் கிடமுண்டு. தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும். புது முயற்சிகளில் இலாபம் நிச்சயம். ஆனுல் மன நிம்மதி இருககாது,

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

எதிர்ப்புக்களையும் கண்டனங்களையும் சந்திக்கவேண்டி வரும். செலவுகள் பெருகும். புது முயற்சிகள் தடங்கல்படும். தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும்.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாய இலாபம் நிச்சயம், தடைகளைத் தாண்டி இலட்சியத்தை அடைவீர். தந்தைவழி உறவினர் மிக உதவுவர்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்ப நிலைமை திருப்தியாயிருக்காது. உடல் நிலைக் குழப்பத்திற்கும் இடமுண்டு. இனத்தவருடன் மோதல் உண்டாம், எதிர்பாலைச் சேர்ந்த நண்பர்கள் மிக உதவுவர்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

மனநிம்மதி இருக்காது. குடும்பத்தகராறுகளும், தவறுன விளக்கங்களும் உண்டாம், தந்தைவழி உறவினருடன் எல்லா விடயங்களிலும் கவனமாகப்புழங்குக. எதிரிகளுக்கு இன்னல் உண்டாம்,

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உமது சாதனைகளில் தடைகளைத்தாண்டி வெற்றி பெறுவீர். பண இலாபமும் உண்டாம். சிறு உடல் நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

ஞாயிறு, திங்கள், செவ்வாய் காலை எச்சரிக்கையோடு வழிய வேண்டும், மிகுதி நாட்கள் ஓரளவு சாதகமானவை. வெற்றிக்காகக் கடுமையாக உழைக்க வேண்டும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 4472.
யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
சுண்ணுகம் தெற்கு
கார்த்திகேசு அப்புத்துரை
—வழக்காளி
சுண்ணுகம்
வல்லிபுரம் பொன்னம்பலம்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டில் M.B. 4472-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1963-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ம் திகதி (29-8-63) வியாழக் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 4893 இன்னும் ரூபா, 3000-க்கு 21-12-61 தொடக்கம் 25 - 6 - 62 வரைக்கும் 100-க்கு பத்துவீத வட்டியும் பின் கூட்டுத் தொகைக்கு இறுபடுப் வரைககும் 100-க்கு 5 வீத வட்டியும் இதில் ரூபா 1000/- ஒப்படைக்கப்பட்டது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோயிற்பற்று உடுவிலிறை "கரங்கூடல்" பர.நி. இலா. பன்னிரண்டு (12) கிணறும். எல்லை கிழக்கு சபாபதிப்பிள்ளை கனகசபாபதியினுதனம், வடக்கு சிவகுருநாதர் கனகசபையினுதனம், மேற்கு ஒழுங்கை முகப்பும், வல்லிபுரம் துரைசிங்கத்துக்குமுரிய ஆதனம், தெற்கு கந்தசாமி பெண் சரஸ்வதியினுதனம். ஆனுல் சொல்லப்பட்ட கிணற்றுத் தண்ணீர்ப்பங்கு மறுகாணிகளுக்கும் புறநீங்கலானது. அத்துடன் வட எல்லைக்காணிக்கு மேற்குப் பக்கமாக இருந்து போகும் ஒழுங்கையில் வழிப்பாதைப் பாவிப்புருத்தும், இதடங்கலும்,

தா. செல்லையா,
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.

இல: 37.
கொளும்புத்துறை வீதி,
சுண்டிகுளி,
M 80 26-7-63,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டிசன் சட்டப்படி
## விற்பனவு விளம்பரம்

—0—

பருத்தித்துறை
டிஸ்திறிககோட்டு வழக்கு

இல: 7417.

வழக்காளி,
பேதுறுப்பிள்ளை சின்னத்தம்பி
புலோலி தெற்கு.

எதிராக

எதிரிகள்:- 1, இராம முத்தையா, 2, பெண் மகேஸ்வரி இருபேரும் கோப்பாய், 3. கந்தையா குமாரசாமி, 4. பெண் இரத்தினம் இருபேரும் கோப்பாய், தற்போது குறுநகர் யாழ்ப்பாணம்.

மேற்குறித்த இலக்கப் பாட்டிசன் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும், அக்கோட்டால் அனுமதிக்கப்பட்ட விற்பனை நிபந்தனையின் படியும், அவ்வழககில் கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட அதிகாரப் பத்திரத்தின்படியும், உலாந்தாமேஸ்தர் T.சுப்பிரமணியம் அவர்களால் 19-8-1962-ல் விந்தாரிக்கப்பட்ட 2259-ம் நம்பர் படத்தில் காட்டப்படும், பின்னுற் காணும் டாப்பில் விபரிக்கப்பட்டிருக்குமாதனம் 1963-ம் ஆண்டு ஆவணி மாசம் 17-ந் தேதி சனிக்கிழமை (17-8-63) மூற்பகல் 10 மணியளவில், குறித்த ஆதன விடமாகவிருந்து முதலாவதாக, கோட்டால் அனுமதிக்கப்பட்ட மதிப்பிற்குக் குறையாத விலைக்குப் பங்காளிகளுககுள்ளும் அவ்விதம் பங்காளிகள் அம்மதிப்புக்குக் குறையாத விலைக்கு வாங்கத் தவறின், உடனேயே பிரசித்த ஏலததிலும் என்னுல் விற்கப்படும்.

ஆதன டாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம், டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று, பருததித்துறை மழுவராயகுறிச்சி, நெடுங்குளவெளிததெணி, நிலப்பரப்பு 6. இது உலாந்தா மேஸ்தர் K. வேல்முருகு அவர்களால் 1116-ம் நம்பர் படத்தில், 8-2-1932-ம் ஆண்டில் விந்தாரிக கப்பட்டுள்ளது. இதில் 1-ம் நம்பர்த்துண்டுக்கு நிலப்பரப்பு 1 குளி 14. எல்லை கிழக்கு 2-ம், 3-ம், 7-ம் துண்டுகள். வடக்கு சின்னத்தம்பி சின்னையாவுக் குடைய வாதனம். மேற்கு மெதோடிஸ்த மிஷனுக்கும், மேற்காட்டிய படத்தின 6-ம துண்டு ஆதனமும். தெற்கு மேற்காட்டிய படத்தின் 4-ம் நம்பர்த் துண்டு, இவ்வெல்லைக்குட்பட்டவை யாவையும் 7-ம் நம்பர்த துண்டின் கிணற்றுடன் நிலம், மற்றும்யாவிலும் 1/3 பங்கும். இது 1-ம், 2-ம் துண்டுகளாக T. சுப்பிரமணியத்தால் 19-8-1962ல் விந்தாரிக்கப்பட்ட 2259-ம் நம்பர் படத்தில்காட்டப்பட்டிருக்கிறது,

மேற்படி படத்தில் 2-ம் நம்பர்த துண்டுக்கு குளி 3 எல்லை கிழககு ரோட்டு, வடக்கு சின்னத்தம்பி சின்னையாவுக குடைய வாதனம். மேற்கு முன்கூறிய துண்டு ஆதனம். தெற்கு 3-ம் நம்பர்த துண்டு ஆதனம், இவ்வெல்லைக குட்பட்ட யாவையும், இது 2-ம் நமபர்த்துண்டாக T. சுப்பிரமணியம் அவர்களால் 19-8-1962-ல் விந்தாரிக்கப்பட்ட 2259-ம் நம்பர் படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா: 11,660.

கா. முத்துக்குமாருஐயர்,
காமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சந்திதிவேல்,
பருத்தித்துறை. 16-7-63.
M 86 26-7-63

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |
| கல்வி நிலையங்களுக்கு | 4-50 |

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாறுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Sdt. 1

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
தெல்லிப்பழை கிழக்கு
கந்தர் சின்னத்தம்பி
—வழக்காளி.

வழக்கு இல. M.B. 4432

எதிராக

உரும்பிராய் வடக்கு
1, தம்பையா செல்லையாவும் மனைவி
2, பாக்கியமும்
எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4432 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1963ம் ஹூ ஆகஸ்ட் மீ 24 உ (24-8-63) சனிக்கிழமை மூற்பகல் பத்துமணி தொடக்கம் அங்கந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2533-ம் மேலும் ரூபா 2000-க்கும் 5-2-61 தொடக்கம் 24-5-62வரைக்கும் வருடமொன்றுக்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுததொகைக்கும் இறுக்குப்வரைககும்வருடமொன்றுககு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 219-60 சதமும். இதில் வழக்காளிக்கு எதிரியால் கொடுபட்ட 1450-00 ரூபா குறைய,

காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோயிற் பற்று வீமன்காமம் இறை "சட்டம்பியா வளவு" நிலப்பரப்பு ¾ தென்னை மரங்களும் இலந்தையும் எல்லைகிழககு சங்கரப்பிள்ளை தம்பையாவுக்கும் சகோதரர்களுககுமுரிய ஆதனம். வடக்கும் தெற்கும் ஒழுங்கை மேற்கு சங்கரப்பிள்ளை தம்பையாவினுதனம். மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க் கால் உரித்துடன் இதில சொரியலாய் அரைவாசிப் பங்கு.

2. வீமன்காமம் இறை 'புவசில்காவததையும் சிற்றன் சீமாவும்' நிலப்பரப்பு 7. குளிகள் 6 கிழக்கெல்லையிலுள் நிற்கும் பனைகளும் இதற்கு எல்லை கிழக்கு வல்லிபுரம் முருகேசுவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம் வடக்கு இராமலிங்கம் மனைவி செல்லமுத்துவினுதனம், மேற்கு தம்பிப்பிள்ளை மனைவி அன்னம்மாவினுதனம், தெற்கு இரத்தினசிங்கம் மனைவி கனகம்மாவினுதனம். மேற்கெல்லைக் காணியின் வடக்கெல்லை நெடுக ஆறுமுழ அகலமுள்ள பாதை உரித்துடன் இது முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கோட் கொம்மிஷனர்.
643 காங்கேசன் துறைவீதி
யாழ்ப்பாணம் 6-7-63.
M 8. 26-7-63,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு
வைரமுத்து கந்தையா
—வழக்காளி.

வழக்கு இல. M.B. 3953

எதிராக

சங்கானை
1, கந்தையா சண்முகசுந்தரம்
2, கந்தையா விஜயரததினம்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B 3953-ம் இலகக வழக்கில் எனக்குககிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகள் 1963ம் ஆண்டு ஆவணிமாதம் 31-ம் திகதி (31 - 8 - 63) சனிககிழமை காலை 10-30 மணி தொடககம் அந்தக் காணிகட்குள் நின்று பிரசிதத ஏலததில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா: 4035-ம. 13-3-61 தொடக்கம் 29-8-62வரைக்கும் ரூபா 3250ககு 10 வீத வட்டியும், அதன்பின் பணம் முற்றுக இறுபடும் வரைககும் முழுததீர்வைத்தொகைககும் 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 232-97 சதமும்.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாம மேற்குப் பகுதி, சங்கானை கோயிற்பற்று, சங்கானையும் சங்கானை கிழககும் இறை, "மலப்பை வளவு" நிலப்பரப்பு 2 வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு சின்னத்தம்பி வல்லிபுரத்தின் ஆதனம். வடககு சின்னத்தம்பி வல்லிபுரததுககுரிய காணியும் கீழ்க்குறிப்பிட்ட இரண்டாவது காணியும், மேற்கு சரவணை பெரியதம்பியின் ஆதனம். தெற்கு தம்பு நாகலிங்கததுககும் பங்காளருககுமுரிய ஆதனம, இவ்வெல்லைகளின்படி இதடங்கலும. சின்னத்தம்பி வல்லிபுரததுககுரிய வடக்கெல்லைக காணியிலிருககும் கிணற்றில் இதற்குரிய பங்கும் இங்கே குறிப்பிட்ட இரண்டாவது காணிககூடாக வழி வாயக கால் பாவிப்புரிமையும் இதற்குரிய மற்றைய எல்லா உடமையும்; ஆனால் மேற்குக்காணிக்குப் பாவிப்புககுரிய வடககுப்பககததிலுள்ள வேலிக்கரையாலுள்ள இரண்டுமுழ அகலப்பாதைதவிர. E 334/29-ல் பதியப்பட்டது.

2, ஷை இறை, "மலப்பை வளவு" நிலப்பரப்பு (1/4). செய்பயிர்களும் வான்பயிர்களும். எல்லை கிழக்கு சரவணை பெரிய தம்பியின் காணி. வடக்கு ரோட்டு. மேற்கு கோயில் ஆதனம், தெற்கு இங்கே குறிப்பிட்ட முதலாவது காணி. இவ்வெல்லைகளின்படி இதடங்கலும்.

E. 334/30-ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை,
ஏலதாரர், தரகர்.
Commissioner of Sales,
Valuer Auctioneer & Broker.
மல்லாகம். 13-7-63.
M. 88 26-7-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 3041

கட்டுடை
இராசசிங்கம் அதிதப்பிள்ளை
வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம்காலாந்துறைரோட் பெரியதெரு இல 57,
1. சேகு கல்தான் அப்துல்காதர் முகமத் சதுக்குததுல்லாவும்.
2. பெண் மய்முனும்.
பருததித்துறை புலோலி
3. நாகலிங்கம் கந்தையாவும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B 3041-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும ஒரு துண்டுக காணியை 1963 ம் ஹூ ஆவணி மீ 24 ந் உ சனிககிழமை பிற்பகல 4 மணி தொடககம் அந்தககாணிக்குள் நின்று பிரசிதத ஏலததில் விற்கப்படும்.

தீர்வைததொகை:-முதல்வட்டி ரூபா 6,960-ம், 17-9-59 தொடககம் 17-5-60 வரைக்தும் ரூபா 6,000க்குப் 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்குப்வரை 6 வீத வட்டியும் கோட்டுச் செலவு 275 ரூபா 29 சதமும், இந்த முதல் வட்டியில் ரூபா 1,500 வழககாளிககுக கொடுபட்டிருக்கிறது. கோட்டுச் செலவிலும் ரூபா 200 கொடுபட்டிருககிறது.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "புளியடி" பர. நில. இலா. 1-ம் (ஒன்று) குளி 6½ யும் யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் D 196/249-ம் இலக்கத்தில் பர. நில. இலா 1 (ஒன்று) குளி 7/8 என்றும் காண்பிக்கப்பட்டிருககிறது இததுடன் கல்வீடும், கிணறும், பயிர்வகைகளும், மற்றும் அதைச்சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு முதலீன் லெப்பையின் உரிமைக்காரரின்ஆதனம் மேற்கு சாகுல்கமீத் முகம்மத லெப்பை கைம்பெண் முகமக் பதும்மா நாச்சியாவின் ஆதனம். தெற்கு சாலில் கமீத் முகமத் லெப்பை கைம்பெண் முகமத் பதும்மாநாச்சியாவின் ஆதனமும். நாவாந்துறை ரோட்டும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் 253/163-ம் இலககததில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்.
16 A, அம்மன்ரோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
M 81 26-7-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக கோட்டில்
கொட்டடி வண்ணார்பண்ணை
மேற்கு யாழ்ப்பாணம்
சின்னையாமகள்பாககியலெட்சுமி
வழக்காளி.

எதிராக

இல M B 4658
1. நல்லதண்ணீர்க் கிணற்றடி ரோட் வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம் சின்னவி அப்புத்துரை
2. ஷையூர் பெண் கமலாட்சி.
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4658 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுககட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963 ம் ஹூ ஆவணி மீ 24 ம் உ சனிக்கிழமை மூற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக்காணிககுள் நின்று பிரசிதத ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 7031ம் ரூபா 4500-க்கு 28-2-62 தொடக்கம் 12-6-62 வரை 12 வீதமான வட்டியும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

யாழ்ப்பாணம், மானிப்பாய்
ரோட்டு இல. 78,
ஆறுமுகம் அருளம்பலம்
கைப்பெண் மீனுட்சிப்பிள்ளை
— வழககாளி.

இல. M.B. 3994,

எதராக

யாழ்ப்பணம், பிறவுண் ரோட்டு
5-ம் ஒழுங்கை.
,, 1, நாகன் கதிரவேலு
,, 2. பெண் பாககியம்
,, 3. ஆறுமுகம் சண்முகம்
கைம்பெண் சீதை
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 3994-ம் இலகக வழக்கில் எனககுககிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும ஒருதுண்டுககாணியை 1963-ம்ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 24-ம் திகதி (24-8-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம அந்தககாணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைக்தொகை:-முதல்வட்டி ரூபாய் 3437-50 ம், இதில் ரூபாய் 2500-க்கு 3-5-61 திகதி தொடக்கம் 11-9-61 திகதி வரைககும் 100-க்கு 18 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-ககு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 232-19 சதம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழககிறை "கரியவகுண்டு" நிலப்பரப்பு ஒன்று (1-ப்) குளி 10/16-ம். செய்பயிர்களும், மற்றும் பயிர்களும் கல்வீடும். எல்லை கிழக்கு சின்னவன் பொன்னுத்துரையின் ஆதனம். வடககு மாணிக்கம் இளைய தம்பிக்கும் குமாரசாமி கைம்பெண் தையல்நாயகிப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கையும் ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளையின் ஆதனமும், தெற்கு கிருஷ்ணபிள்ளை பெண் செல்லாச்சிப்பிள்ளையின் ஆதனம், இதடங்கலும் இன்னும் தெற்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்ககால் பாவிப்புரித்தும் தூர்வை உரித்தும் கப்பி பாவிப்புரித்தும் இன்னும் மேற்கெல்லைக காணிககுள் பாதைப் பாவிப்புரித்தும், மூற்பதிவு D 171/32.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 13-7-1963.
M. 90 26-7-63.

அதன் மேல் முழுததொகைக்கும் இறுக்குமவரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 275-25 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் மேற்கிறை 'வெள்ளை சூரிதறையும் வெள்ளை சூரிவயலும்' பர நெ. இல. ஒன்று குளி எட்டுடன் பததில் மூன்று. (பர நெ இல. 1. குளி 8 3/10) கல்வீடும் மேற்குப் பககததில் இருக்கும் கிணற்றில் பங்கும் பயிர்வகைகளும் எல்லை கிழககு பண்ணை ரோட்டு வடக்கு புண்ணியன் கைம்பெண் நாகமுத்துவிற்குரிய வாதனம். மேறகு வயிரவி சின்னப்பொடிக்கும் பெண் சின்னப்பிள்ளைக்குமுரியவாதனம், தெற்கு உத்தரவு பெற்ற உலாந்தா ஏ. லாசறஸ் 6-3-56 ல் 1794 ம் இலக்கத்தில் தயாரித்த அளவு படத்தில் 2ம் துண்டாகக் காட்டப்பட்ட ஆதனம். இதன்பதிவு D 243/68.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1963-ம்ஹூ ஆடி மீ 8-ம்உ
காரைநகர்.
M. 87 26-7-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 26-7-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org